★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✵ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: சித்திரை 1உ வெள்ளி (13—4—56) ★ ★ வெளியூர்: சித்திரை 2உ சனி (14—4—56) [இதழ் 258

விந்தையுமல்ல-வேடிக்கையுமல்ல நிர்வாகத்தின் இலட்சணம்!

திருவனந்தபுரம், ஏப். 12—

பாவம்! நோயாளியாக இருக்கும்போது ஓய்வு கேட்டார்; ஆனால், 'லீவு' கிடைத்ததோ, அவர் இறந்த பிறகு! சர்க்கார் எத்தனை இலட்சணமாக நிர்வாகம் நடத்துகிறார்கள் என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டு!

பாஸ்கரன் என்ற சர்க்கார் ஊழியர்—சேவகர், தான் நோய்

(4-ம் பக்கம் பார்க்க)

வடநாட்டிலிருந்து பிரிந்தால் தென்னாடு வாழ முடியாதாம்!

காமராசரின் அரசியல்-பொருளாதார 'மேதா விலாசம்'

தேர்தல் பற்றிய கழக முடிவு கண்டு ஓலமிடுகிறார்!

ஆழந் தெரியாமல் காமராசர் காலை விடுகிறாரா?

'ஊமைக்கு உளறுவாயன் மேல்' என்பார்கள், தமிழ் நாட்டில்; ஆனால், காமராசர் உளறிவழிவதைப் பார்த்தால், 'உளறுவாயனுக்கு ஊமையே மேல்' என்று சொல்லத் தோன்றுகிறது.

ஊமையாய்த்தான் இருந்தார் — சதுர்த்தியின்போது அச்சில் வார்த்தெடுக்கப்படும் களிமண் பிள்ளையார் போல—காமராசர்! இப்போது, பேசப் பழகி வருகிறார்; பேசவில்லை—அவர் உளறிக் கொட்டுகிறார், ஊர் தவறாமல்!

சேலம் மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்கையில் இந்த மகானுபாவர், பேசுவதற்கு என்று ஏற்பாடாகியிருந்த இடங்களில் எல்லாம், தி. மு. கழகத்தின்மீது பாய்ந்திருக்கிறார். கழகத்தை ஏதோ இவர், கொடிய குற்றவாளிக் கூண்டில் நிறுத்துவது போலவும், இவரது குற்றச்சாட்டுகளுக்கு தி. மு. கழகம் பதில் கூறமுடியாது தவிப்பது போலவும், கனவு கண்ட நிலையிலோ என்னவோ, கழகக் கருத்துக்களை மறுத்துரைப்பதாக எண்ணிக்கொண்டு, உளறியிருக்கிறார்.

வடநாட்டிலிருந்து பிரிந்தால் தென்னாடு வாழ முடியாதாம் —இந்த அரசியல் பொருளாதாரத்துறை மாமேதை கூறுகிறார். ஏன் வாழ முடியாது? எப்படி வாழ முடியாமற் போய்விடும்? என்ன அப்படி, தென்னாடு வாழ்வதற்காக, வடநாட்டிலிருந்து வந்து குவியும் செல்வம் இல்லாமற் போய்விடும்? தென்னாட்டில் என்ன இல்லை, தனித்து வாழ்வதற்கு முடியாமற் போய் விட—என்பதை எல்லாம், முதன் மந்திரி என்ற முத்திரையுடன் உலவும் இந்தப் பெரிய மனிதர் விளக்கினாரா என்றால், அது தான் இல்லை!

சோஷலிசம் என்றால், இரயில் எஞ்சின் 'டிரைவ'ருக்கு— அவரவர்கள் உட்கார்ந்திருக்கிற பெட்டி அவரவர்களுக்கு— 'கார்டு' வண்டி அந்த 'கார்டு'க்கு—இதுதான் சோஷலிசம் —என்று பேசுகிற அளவே அரசியல் ஞானம் கொண்ட இந்த மனிதர், எப்படி வடநாட்டு ஏகாதிபத்தியம் தென்னாட்டின்மீது கொண்டிருக்கிக்கிற அரசியல் பொருளாதார ஆதிக்கப் பிடிப்பை உணரமுடியும்?

"'நாடெல்லாம் வாழக் கேடு ஒன்றும் இல்லை' என்று சொல்வதில்லையா? 'வடக்கு வளருது—தெற்கு தேயுது'; 'தென்னாட்டைக் கவனிப்பார் யாருமில்லை,' என்று கூறுகிறார்கள்; வடநாட்டிலிருந்து பிரிந்தால் தென்னாடு எப்படி வாழ முடியும்? வடநாடுதான் எப்படி வாழமுடியும்?" என்று கேட்டாராம், இந்த மதியூகி!

'காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரை இந்தியா ஒன்று தான்' என்றும் உபதேசம் புரிந்துவிட்டு, 'எனவே, வடக்கு— தெற்கு என்று பிரித்துப்பேசக் கூடாது', என்றாராம்!

தமிழர் வீரம், பண்பு குறித்து வேறு, இந்தப் புண்ணியவான் பேசத் துவங்கியதுதான், வியப்பிற்குரியதாகும்.

தன் நாடு எது—தன் மொழி எது—தன் இனம் என்ன— தன் இனப் பண்பாடு என்ன என்பதே புரியாத இந்த மனிதர் 'நாடெல்லாம் வாழக் கேடு ஒன்றும் இல்லை' என்று பழமொழிக் கூற முற்படுவது, கேலிக்குரியதாயில்லையா?

வடநாடு—தென்னாடு என்று சொல்லி தி. மு. கழகம் குழப்பம் உண்டாக்குகிறதாம்—இந்த 'ஆகஸ்டு தியாகி' கூறுகிறார்.

'வேண்டுமானால் தேர்தலில் நின்று பார்க்கட்டுமே', என்று தி. மு. கழகத்திற்கு 'சவால்' வேறு தந்திருக்கிறார்—இந்த வீராதி வீரர், விருதுநகரார்!

(4-ம் பக்கம் பார்க்க)

'ஆதிக்கபுரி'யினர் மண்ணாசை!

இலட்சுமணபுரி, ஏப். 11—

உத்திரப் பிரதேச சட்டசபையில், 'விந்தியப் பிரதேசத்தையும் உத்திரப் பிரதேசத்துடன் சேர்க்க வேண்டும்; இல்லாவிட்டால், உ. பி.-க்கு அடுத்துள்ள பாகல்கந்த் போன்ற சில பகுதிகளையாவது சேர்க்கவேண்டும்,' என்று, மாநிலப் புனரமைப்பு மசோதாவுக்கு முதலமைச்சர் கொண்டுவந்த திருத்தம் நிறைவேறியிருக்கிறது.

வேலை நிறுத்தத்தில் தலைமை தாங்கியவர்!

தொழிலாளர் இலாகா அமைச்சரானார்

கொழும்பு, ஏப். 13—

இலங்கையில், பண்டாரநாயகாவின் அமைச்சரவையில், தொழிலாளர் இலாகா அமைச்சராகப் பதவியேற்றுள்ள டி. பி. இலங்கரத்ன என்பவர், சர்க்கார் அலுவலகத்தில் குமாஸ்தாவாக இருந்தவர்; 1947-ல் சர்க்கார் குமாஸ்தாக்கள் வேலை நிறுத்தத்தை அவர் தலைமை தாங்கி நடத்தியதற்காக அலுவலிலிருந்து 'டிஸ்மிஸ்' செய்யப்பட்டவராவர். அவர் எழுத்தாளருங்கூட!

வெளிநாட்டு முதலீடு!

'இந்தியாவில், எந்த ஒரு குறிப்பிட்ட வெளிநாட்டைச் சேர்ந்தவர்களும், முதலீடு செய்வது பற்றி சர்க்கார் அறிக்கை எதும் வெளியிடுவதாக இல்லை,' என்று நிதிமந்திரி தேஷ்முக், மக்கள்சபைக் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்திருக்கிறாராம்.

நோக்கம் என்னவோ?

தொழிலாளர் இலாகா மானியக் கோரிக்கைகள்மீது நடைபெற்ற விவாதத்தின்மீது பேசுகையில் புருஷோத்தமதாஸ் தாண்டன், ரிக்ஷாக்களை ஒழித்து விட்டால் எழு இலட்சம் பேர்களுக்கு வேலையில்லாமல் போய்விடுமென்றும், அவர்களுக்கு வேறு வேலை தருவதற்கும் வழி கிடையாதென்றும் கூறியுள்ளார்.

ரிக்ஷாக்களை ஒழிப்பதற்குத் தாண்டன் போன்றோர் எதிர்ப்புத் தெரிவிப்பது எனக்கு ஆச்சரியமாகவே இருக்கிறது, என்று தொழிலாளர் இலாகா துணை மந்திரி கூறியுள்ளார்.

821 போராட்ட வீரர்கள் கைது

பலருக்கு மூன்றரை மாதக் கடுங்காவல்!

சம்யுக்தமராட்டிய கோரிக்கைக்காக இடைவிடாத கிளர்ச்சி

பெல்காம், ஏப். 12—

"மராட்டிய மண்டலத்தைச் சிதைக்கக்கூடாது; மராட்டியருக்கு உரிய—மராட்டியர் பெரும்பான்மையினராக வாழும் பகுதிகளை மராட்டியத்துடன் இணைத்து, மராட்டிய மொழி மாநிலம் அமைக்க வேண்டும்; மராட்டியத்தின் தலைநகராக பம்பாய் இருக்க வேண்டும்" என்று கோரி, பெல்காம் நகரிலும் தொடர்ந்து கிளர்ச்சி நடைபெற்று வருகிறது.

இதுவரை சுமார் 821 பேர் இந்தக் கிளர்ச்சியை ஒட்டிக் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

நேற்று முன்தினம், பெல்காம் மாவட்டத்தைச் சேர்ந்த கானுபூர் நகரிலிருந்து ஏராளமான தொண்டர்கள், பெல்காம் நகருக்கு வந்து 'சத்தியாக்கிரகம்' செய்திருக்கின்றனர். இவர்களில் 7 பேர்வரை தாய்மார்கள் என்றும், இவர்களும் கைது செய்யப்பட்டு சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்றும் தெரிகிறது.

வேறு 14 தொண்டர்களுக்கு மூன்றரை மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டதாம்; விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவை மீறியதுதான் அவர்கள் புரிந்த குற்றமாம்.

வேறு சிலருக்கு ரூ. 50 அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டதாம்.

புதுடில்லி, ஏப். 11—

முக்கியமான சிறு தொழில்களில் பயிற்சி பெறுவதற்காக சுமார் 50 தொழிலாளர்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பிவைக்கப்படுவார்கள்.

தீண்டாமை ஒழிப்பு

பிரச்சாரத்திற்காக 1 கோடி ரூபாய் செலவிடப்பட்டது

மக்கள் சபையில் மந்திரி தகவல்

புதுடில்லி, ஏப். 12—

கிராமப்புறங்களில் இன்னும் தீண்டாமைப் 'பேய்' உலவத்தான் செய்கிறது; இந்தத் தீண்டாமை எனும் தீங்கிழைப் போரை, அந்தத் தீமை புரிவதைக் கைவிடுமாறு தூண்டுவது சர்க்காரின் முதல் வேலையாக இருந்து வருகிறது. இதற்காக, முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், பிரச்சார வேலைகள் மேற்கொள்ளப்பட்டதற்கு மட்டும் ஒரு கோடி ரூபாய்க்குமேல் செலவு செய்யப்பட்டிருக்கிறது.

"தீண்டாமை எனும் தீமைக்கு ஆளாகும் தாழ்த்தப்பட்ட மக்கள், நீதிமன்றங்கள் மூலம் தங்கள் துயரங்களைத் தீர்த்துக் கொள்வதற்காக, வழக்காடும் செலவைத் தந்து உதவக்கூட சர்க்கார் தயாராகவிருக்கின்றனர்,"

என்று, உள்நாட்டு இலாகா மந்திரி பி. என். தத்தார், மக்கள் சபையில் குறிப்பிட்டிருக்கிறார்.

பல தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த உறுப்பினர்கள், தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தைக் கண்டிப்பாக அமுல் செய்யுமாறு சர்க்காரைக் கேட்டுக்கொண்டனர்.

டெல்லியின் அநீதிக்கு எதிராக மராட்டியவீராங்கனைகள் அறப்போர்

22 தாய்மார்கள் கைது

நாசிக், ஏப். 12—

சம்யுக்த மராட்டியம் கோரி, மராட்டிய மண்டலமெங்கணுமுள்ள முக்கியமான நகரங்களில் எல்லாம் நடைபெறும் அறப்போராட்டங்கள் பற்றி, தொடர்ந்து செய்திகள் கிடைத்தாலும், அவற்றின் முழுவிவரங்கள், தேசிய இதழ்களின் இருட்டடிப்பிற்கு ஆளாகிவிடுகின்றன.

நாசிக் நகரில் பம்பாய் நகரை மராட்டியத்துடன் சேர்க்கக் கோரி தொடர்ந்து அறப்போராட்டம் நடைபெறுவதாகத் தெரியவருகிறது.

கடந்த ஏப்ரல் 11-ந் தேதியன்று 'சத்தியாக்கிரகம்' செய்த தாய்மார்கள் 22 பேர் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

அதைத் தொடர்ந்து எண்ணற்ற இளைஞர்கள் அறப்போரில் ஈடுபட்டிருக்கிறார்கள்; அவர்களையும் போலீசார் கைது செய்திருக்கின்றனர் என்று தெரிகிறது.

கைது செய்யப்பட்ட அந்த இளைஞர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பது தெரியவில்லை.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 13—4—'56 வெள்ளி

ஆளுவோருக்குப் பாடம்!

'கொடுமைக் குணாளர்' என்று தமிழர் தந்த பட்டப் பெயருடன் இலங்கைத் தீவில் கொட்டமடித்துக் கொண்டிருந்த கொத்தலாவலையின் பிரதமர் பதவி பறிக்கப்பட்டிருக்கிறது.

சுதந்திரம் பெற்ற பிறகு நடைபெற்ற இரண்டாவது பொதுத் தேர்தலில், கொத்தலாவலையைத் தலைவராகக்கொண்டு ஆட்சிபீடத்திலிருந்த ஐக்கிய தேசியக் கட்சி படுதோல்வி கண்டிருக்கிறது. 101 உறுப்பினர் கொண்ட மக்கள் சபையில், சென்ற முறை 54 இடங்களை நிரப்பிக் கொண்டிருந்த அக்கட்சி, இம்முறை 8 இடங்களை மட்டுமே பிடிக்க முடிந்திருக்கிறது.

பண்டாரநாயகா தலைமையில் உருவான 'மகாஜன எக்சத் பெராமுன' என்றழைக்கப்படும் மக்கள் ஐக்கிய முன்னணிக் கட்சி தனிப்பெரும் வெற்றி பெற்றிருக்கிறது; 51 இடங்களைக் கைப்பற்றியுள்ளது. நவலங்கா சமசமாஜ கட்சி 14 இடங்களையும், தமிழர் நலனுக்கான சமஷ்டிக் கட்சி 8 இடங்களையும் கைப்பற்றியிருக்கின்றன. இதர இடங்களை சுயேச்சைகள் 6, கம்யூனிஸ்டுகள் 3, தமிழர் எதிர்ப்பு முன்னணி 1, தமிழர் காங்கிரஸ் 1—என்று பங்கு போட்டுக் கொண்டிருக்கின்றன. 5 இடங்கள், ஆளும் கட்சியினரின் விருப்பம்போல நியமித்துக் கொள்ளப்பட வேண்டியவையாகும்.

பெரும்பான்மை பலத்துடனும், தீவிற்குச் சுதந்திரம் பெறப் போராடியவர்கள் என்ற புகழுடனும் ஆட்சிப் பொறுப்பிலிருந்த கொத்தலாவலையின் ஐக்கிய தேசியக் கட்சியினர், ஆச்சரியப்படத்தக்க வகையில் தோல்வியடைந்ததின் காரணங்களைப் பொறுத்ததுதான், பண்டாரநாயகாவைத் தலைவராகக் கொண்ட முன்னணி பெற்ற எதிர்பாராத பெரும் வெற்றியும்.

"சிங்களத்தை மட்டுமே ஆட்சி மொழியாக்குவோம்; தமிழ் மொழிக்கு அந்த 'அந்தஸ்து' கிடைக்காமற் செய்வோம்" என்று தேர்தல் உறுதிமொழி வழங்கியவர்கள்தான் தோல்வி கண்ட 'கொத்தலாவலையும், வெற்றி பெற்றுள்ள பண்டாரநாயகாவும்—தம் தம் கட்சி சார்பில்.

வாக்காளர்முன், தேர்தல் காலத்தில் பேருருவாய் நின்ற பிரதானமான இந்த மொழிச் சிக்கலில், ஒரே உறுதிமொழியை வழங்கிய கொத்தலாவலை தோற்றதும், பண்டாரநாயகா வெற்றி பெற்றிருப்பதும், தீவிரமாகச் சிந்தித்து ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும்.

இலங்கையின் முக்கியமான—குறிப்பிடத்தகுந்த சிறுபான்மையினர் என்ற நிலையில்உள்ள தமிழர்களுக்குக் கொத்தலாவலை இழைத்துவந்த அநீதிகள் கண்டு, பெரும்பான்மையினரான சிங்கள மக்கள் அனுதாபப்பட்டு, அந்த அநீதிகளைத் துடைத்து சிறுபான்மையினருக்கு ஒத்த நீதி கிடைக்க வழி செய்வோம் என்ற பெரிய உள்ளத்தோடு, 'சிறுபான்மையினரிடம் நேர்மையாக நடந்து கொள்வோம்' என்று கூறுகிற பண்டாரநாயகா கட்சியினரை ஆதரித்தார்கள் என்று கொள்வதற்கும் இடமில்லை. ஏனெனில், இலங்கையின் நிரந்தரக் குடிமக்களாகியுள்ள சிறுபான்மையினரான தமிழருக்கு, அவர் தம் மொழிக்கு ஆட்சியலமரும் 'அந்தஸ்து' இல்லை என்றுதான் பண்டாரநாயகாவும் கூறுகிறார். தமிழர்களுக்கு, இந்த மொழி விவகாரத்தில் இழைக்கப்படும் அநீதியைவிட, வேறென்ன பெரும் அநீதி இழைக்கப்பட முடியும்?

பின் ஏன், சிங்களப் பெருமக்கள், கொத்தலாவலையை வெறுத்து ஒதுக்கினர்? ஆச்சரியமாய்த்தானிருக்கிறது.

இலங்கை கஜானாவில், கொத்தலாவலை பதவி ஏற்கும்போது 3 கோடியே 60 லட்சம் ரூபாய் இருந்ததாகவும், அவர் பதவிக் காலத்தில் அந்தத் தொகை 19 கோடியே 70 இலட்சமாக உயர்ந்திருப்பதாயும், அது தவிர சீனாவிற்கும், பர்மாவிற்கும் கடனாக ஆறரை கோடி ரூபாய் கொடுக்கப்பட்டிருப்பதாயும், கொத்தலாவலையே, பதவியிலிருந்து விலகும்போது தெரிவித்திருக்கிறார்.

சின்னஞ்சிறு இலங்கைத் தீவின் செல்வப் பெருக்கத்திற்கு இத்தனை பாடுபட்ட கொத்தலாவலை, நிலைகுலைக்கப் பட்டிருப்பது, ஆச்சரியத்திற்குரியதுதானே!

கொத்தலாவலை, இலங்கைத் தீவை அடிமைகொண்டிருந்த வெள்ளை ஆதிபத்தியவாதிகள், மற்றும் அமெரிக்கா போன்ற ஏகாதிபத்தியங்களுடன் கூடிக் குலவுகிறார்; அவர்கள் நாடுகளில் உலவி மகிழ்கிறார்; இலங்கையை மேற்கு வல்லரசுகளின் 'சார்பு நாடு' என்றுகூட அல்ல — 'கைப்பாவை' என்றழைக்கும்படியான நிலைக்குக் கொண்டுவந்துவிட்டார்; பிரிட்டன், இலங்கைத் தீவில் இராணுவத் தளம் அமைத்துக் கொள்ள வழிசெய்யும் ஒப்பந்தம் ஒன்றை வெள்ளையருடன் செய்துகொண்டிருக்கிறார்; அண்டையில், ஆசியாவின் ஜோதியாக ஒளிவிட்டுத் திகழும் இந்தியப் பிரதமர் நேருவின் 'பஞ்சசீல'த்தை ஏற்க மறுத்துவிட்டார்; பாண்டுங் மாநாட்டில் ஏகாதிபத்தியங்களின் குரலாக ஒலித்தார்; இவற்றிற்கான கொத்தலாவலையின் அயல் நாட்டுக் கொள்கை சிங்கள மக்களுக்குப் பிடிக்கவில்லை; அதனால்தான், கொத்தலாவலை தோல்வி கண்டார்—என்று கூறப்படுகிறது.

இதை உறுதி செய்வதற்கு முன் ஒரு சர்க்காரின் வெளிவிவகாரக் கொள்கைகளை ஆராய்ந்து, அவற்றின் நீண்ட கால விளைவுகளைப் புரிந்துகொண்டு, அவற்றிற்கு ஒப்ப தங்கள் கருத்தை உருவாக்கிக் கொள்ளவேண்டும் என்ற ஆழ்ந்த அரசியல் அறிவை, சிங்கள வாக்காளர்கள், இத்தனை குறுகிய காலத்தில் எப்படிப் பெற்றுவிட்டிருக்க முடியும் என்பதையும் எண்ணிப் பார்த்தாகவேண்டும்.

கொத்தலாவலையின், 'பஞ்சசீல' மறுப்புத்தான் அவரது தோல்விக்குக் காரணம் என்று கூறுவதில் சுயவிருப்ப எண்ணம் இல்லையென்று கூறிவிட முடியாது.

சிங்கள வாக்காளர்கள் பண்டாரநாயகாவைத் தேர்ந்தெடுத்ததற்கு, இவற்றிற்கு அப்பால் வேறு ஏதேனும் காரணங்கள் இருந்தாக வேண்டும்; மிகக் குறுகிய எதிர்காலம், இதனைத் தெளிவாக்கத்தான் போகிறது.

இப்போதைக்குப் பொதுவாக, எல்லா நாட்டு ஆட்சியாளரும், குறிப்பாக இந்த நாட்டு ஆட்சியாளரும்—காங்கிரசாரும், இலங்கைத் தேர்தலில் தெரிந்துகொள்ள வேண்டிய பாடம் எல்லாம், 'நாம் ஆளுகிறோம்; என்றென்றைக்கும், ஆள்பவராகவே இருப்போம்' என்ற மமதை, ஒரு ஜனநாயக அரசியலமைப்பின் கீழ், கொண்டிருக்கக் கூடாத ஒன்றாகும் என்பதுதான்.

'சென்னைப் பகுதியில் தொழில்கள் குவிந்து கிடக்கின்றதாம்!

பம்பாய்—கல்கத்தா பகுதிகளை மதருசுடன் ஒப்பிட்டுப் பேசுவதா?

தொழில்களைப் பரவலாக நிறுவும் பொது விதி குறித்தும் போதிக்கிறார்

இந்தியப் பிரதமர் நேருவின் புதிய போர் முரசம்!

சிர்சி, ஏப். 11—

கல்கத்தா, பம்பாய், மதருஸ் போன்ற பகுதிகளில் மட்டுமே தொழில்கள் குவிக்கப்படுவதை தாம் எதிர்ப்பதாக இந்தியப் பிரதமர் நேரு இங்கு குறிப்பிட்டிருக்கிறார்.

"அவைகள், இந்தியாவின் முக்கியமான நகரங்கள்தான்; இருந்தாலும், மற்ற பகுதிகளையும் வளமாக்கவேண்டியது இன்றியமையாததாகும். வளம் பெறும் வாய்ப்பு, பகுதிகள் அனைத்துக்கும் சமமாக இருக்கவேண்டும். நாட்டில் வளம் பெருது கிடக்கும் பெரும் பகுதியின் செலவில், சில இடங்கள் மட்டும் வளம் பெறுவதை இனிமேல் என்னால் சகித்துக்கொள்ள முடியாது. அது நல்லதுமல்ல."

"ஜாதி, மொழி முதலிய தடைகளை இரக்கம தளியும் காட்டாது, மக்கள் தம் முழு சக்தியையும் கொண்டு, உடைத்தெறியவேண்டும். கொடும் பகைவனை எதிர்த்துப் போராடுவது போன்று, வகுப்புவாதம், மொழிவாதம், பிரதேசவாதம் ஆகியவற்றை எதிர்த்துப் போராடவேண்டும்."

"சென்ற காலத்தில் அவைகள், நம்மை அழித்துவிட்டன. நாம் நவ இந்தியாவை சிருஷ்டிக்கும் இப்பொழுதும், அவைகள் தங்கள் தலைகளைத் தூக்குகின்றன."

"புதிய, பெரிய தொழில்கள் துவங்கப்பட்டு வருகின்றன. எண்ணெய் சுத்திகரிக்கும் சாலைகள் நிர்மாணிக்கப்படுகின்றன. ஆகாய விமானங்கள் கட்டப்படுகின்றன. இத்தொழில்கள் நகரப் பகுதிகளிலேயே குவிவதை நான் விரும்பவில்லை. நாட்டில் ஒவ்வொரு பகுதியிலும் அவைகள் நிர்மாணிக்கப்பட வேண்டும்."

பிலாய் உருக்குத் தொழிற்சாலை

கனிப் பொருள் அபிவிருத்திக்குத் திட்டம்

பிலாய் உருக்கு உற்பத்தித் தொழிற்சாலைக்காக, மத்தியப் பிரதேசமாகிலத்தில், ராஜ்ஹரா மலைகளில் காணப்படும் இரும்புக் கனிப் பொருள்களைத் தோண்டும் வேலையை அபிவிருத்தி செய்ய சர்க்கார் திட்டமிட்டிருப்பதாக தொழில் மந்திரி கிருஷ்ணமாச்சாரி தெரிவித்திருக்கிறார்.

கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும்போதுதான், மக்கள்சபையில் இந்தத் தகவலை அவர் தந்திருக்கிறார்.

வடநாட்டில் அலுமினியம் உற்பத்தி

புதிய தொழிற்சாலைகள் முளைக்கின்றன

அலுமினியம் தொழிற்சாலை தென்னாட்டில் நிறுவப்பட வேண்டும்—அதற்கான வாய்ப்புகள் ஏராளமாக இருக்கின்றன என்று டெல்லி சர்க்காருக்கு பன்முறை எடுத்துரைத்தும், இங்கு நிறுவுவது என்றால் அவர்களுக்கு ஏனோ கசப்பாக இருக்கிறது.

அதே நேரத்தில், வடநாட்டில் ஏற்கனவே உள்ள அலுமினியத் தொழிற்சாலைகள், விரிவாக்கப்பட்டு பெரிதாக்கப்படுகின்றன என்பது மட்டுமின்றி, புதிது புதிதாக அலுமினியத் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டு வருவதையும் நாம் காண்கிறோம்.

ஹிராகுட் பிரதேசத்தில் பல நோக்கு நதிப் பள்ளத்தாக்குத் திட்டம் மட்டுமின்றி, எண்ணற்ற தொழிற்சாலைகளும் புதிது புதிதாக முளைத்தவண்ணமிருப்பதைக் காண்கிறோம்.

ஹிராகுட் பிரதேசத்தில், ஆண்டொன்றுக்கு 10,000 டன் அலுமினியம் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை நிறுவ இந்திய அலுமினியம் கம்பெனியார் ஏற்பாடுகள் செய்து வருகின்றனர் என்றும், இந்த ஆண்டில் தொழிற்சாலை உற்பத்தி துவங்கிவிடும் என்றும், உற்பத்தி அளவை 10,000 டன்னிலிருந்து 20,000 டன்னாக உயர்த்துவது பற்றி யோசித்துக் கொண்டிருப்பதாயும் தெரியவருகிறது.

இது மட்டுமின்றி, பம்பாயில் ஏற்கனவே உள்ள அலுமினியம் தொழிற்சாலையை விரிவாக்கவும் ஏற்பாடுகள் பூர்த்தியாகிவிட்டன என்று தெரியவருகிறது.

இந்திய அலுமினியம் கம்பெனி, கடந்த ஆண்டில், வேறெப்போதும் இல்லாத அளவு அதிகமான உற்பத்தியில் ஈடுபட்டது என்பதுடன் அதிகமான இலாபத்திலும் வேலை செய்வதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஆண்டு மேலும் 50 சதவிகிதம் உற்பத்தியை அதிகரிக்க ஏற்பாடுகள் நடைபெற்றுள்ளனவாம்.

கனிப் பொருளைக் கொடுத்து உற்பத்தி பொருள் வாங்கப்படுகிறது

போலந்து நாட்டுடன் இந்தியா ஒப்பந்தம்

'இரும்புக் கனிகளைத் தந்துவிட்டு, இரும்பு உருக்குப் பொருள்களை வாங்கிக் கொள்வதாக, போலந்து நாட்டுடன் இந்திய சர்க்கார் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது.

மொத்தம் 3-இலட்சம் டன் இரும்புத் தாதுப் பொருள்களைத் தந்துவிட்டு, அதே அளவு உருக்குப் பொருள்கள் பெறப்படுமாம். ஒப்பந்தம் மூன்றாண்டுகளுக்குள் நிறைவேற்றப்படுமாம்.

இதுவன்னியில், இரண்டாண்டுகளுக்குள், போலந்திலிருந்து இந்தியா, ஒரு லட்சம் டன் சிமெண்ட் வேறு வாங்கிக் கொள்வதற்கும் ஒப்பந்தம் இடமளிக்கிறதாம்,

ஆந்திராவின் கோரிக்கைக்கும் கைவிரிப்பு!

உருக்கு கட்டும் தொழிற்சாலை அமையாது

டி. டி. கே. தகவல்

ஆந்திர சர்க்கார், தங்கள் மாநிலத்தில் ஒரு உருக்கு கட்டும் தொழிற்சாலை நிறுவக் கேட்டுக் கொண்டுள்ளதாக வர்த்தக தொழில் அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி, டாக்டர் ராமாராவ் என்பாரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

ஆந்திர சர்க்காரின் கோரிக்கை மீது இன்னும் இறுதி முடிவு மேற்கொள்ளவில்லை என்றும், ஆனாலும், இது போன்ற உருக்கு கட்டும் தொழில் நிலயங்களை, உருக்கு உற்பத்தித் தொழிற்சாலைகளின் அருகிலேயே, நிறுவது என்பதுதான் சர்க்காரின் கொள்கையாக இருந்து வருகிறது என்றும் அந்த மந்திரி தெரிவித்திருக்கிறார்.

எனவே, இந்தப் பதிலின்படி, ஆந்திரா அருகே எவ்வித உருக்கு உற்பத்தித் தொழிற்சாலையும் இல்லை என்பதால், ஆந்திராவில் உருக்கு கட்டும் தொழிற்சாலை அமையாது என்றே சொல்லலாம்.

டெல்லி ஏகாதிபத்தியவாதிகளுடன் இந்திய கம்யூனிஸ்டுகள் ஐக்கியம்?

வெளி விவகாரக் கொள்கையை மட்டுமின்றி உள்நாட்டு கொள்கையையும் ஆதரிக்க முடிவு?

ஆட்சியைக் கைப்பற்ற மாட்டார்களாம்!

எதிர்க் கட்சியாக மட்டும் செயல்படுவார்களாம்!

டெல்லி ஏகாதிபத்தியவாதிகளின் வெளி விவகாரக் கொள்கைகளை மட்டும், அவை சமாதான முலாம் பூசப்பட்டிருக்கின்றன என்ற காரணத்திற்காக இதுகாறும் ஆதரித்து வந்த இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியினர் இப்போது, ரஷ்யத் தலைவர்களான புல்கானின், குருஷ்சேவ் ஆகியோர் இந்தியா வந்து சென்ற பிறகு—டெல்லி ஏகாதிபத்தியத்தின் உள்நாட்டுக் கொள்கைகளையும் ஆதரிக்க முடிவு செய்துவிட்டதாகத் தெரிய வருகிறது.

'உள்நாட்டு மக்களின் நலன்களைப் பேணாத ஒரு சர்க்கார்—உள்நாட்டில் ஜனவிரோதமான கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் ஒரு சர்க்கார் வகுக்கும் வெளிநாட்டுக் கொள்கை, எத்தனைதான் மின்னுகிற சமாதான முலாம் பூசப்பட்டிருந்தாலும், எப்படி நேர்மையானவையாயிருக்க முடியும்? கம்யூனிஸ்டு நண்பர்கள், இத்தனை பெரிய முரண்பாட்டினை எங்ஙனம் ஜீரணித்துக் கொள்கிறார்கள்?' என்று, இந்த நாட்டிலிருந்த முற்போக்குவாதிகள் கேள்வி எழுப்பியதின் விளைவாகவோ என்னவோ, இப்போது கம்யூனிஸ்டு நண்பர்கள், டெல்லியின் உள்நாட்டுக் கொள்கைகளுக்கும் தங்களின் ஆதரவை நல்க முடிவு செய்திருக்கிறார்கள் போலும்!

அடுத்த வாரத்தில் பாலக்காட்டில் நடைபெறப்போகும் கம்யூனிஸ்டு கட்சி மாநாட்டில், டில்லி ஏகாதிபத்தியவாதிகளுடன் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி அதிகார பூர்வமாக 'ஐக்கிய'மாகிவிடும் முடிவு நிச்சயமாக மேற்கொள்ளப்பட்டுவிடும் என்றும் கூறப்படுகிறது.

கரீம் நகரில் நடைபெற்ற தெலிங்கானா கம்யூனிஸ்டு கட்சி நேரு சர்க்காரின் வெளிநாட்டு—உள்நாட்டுக் கொள்கைகளுக்குப் பரிபூரணமான ஆதரவு தருவது என்று ஏற்கனவே முடிவு செய்துவிட்டதாம்.

இதுநாள் வரை கம்யூனிஸ்டுக் கட்சியினர், இந்தியாவில் உள்ள அழுத்தப்பட்டு—சுரண்டப்பட்டு அவதியுறும் தொழிலாளி—பாட்டாளி, விவசாய வர்க்கங்களின் ஒற்றுமையைக் கட்டிவளர்த்து, வெகுஜன இயக்கங்களை உருவாக்கி, அவர்களுடைய தலைமையில் மகத்தான வர்க்கப் போராட்டத்தை செயல்படுத்தி, சுரண்டும் வர்க்கத்தை பெரும் புரட்சி மூலம் தலைகுப்புறக் கவிழ்த்து, பிற்போக்காளரிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றி, பாட்டாளிகளின் சொர்க்கலோக சாம்ராஜ்யத்தை ஸ்தாபிப்பது என்று பேசி வந்தார்கள்; ஆனால், இப்போது ஆட்சியைக் கைப்பற்றுவதில்லை என்றும், ஆளும் கட்சிக்கு நல்லதொரு எதிர்க் கட்சியாகமட்டும் செயல்படுவது என்றும் முடிவு செய்யவிருக்கிறார்களாம்.

தேசீய அபிவிருத்திக்காகவே ஐந்தாண்டுத் திட்டங்கள் என்பதால், அந்தத் திட்டங்களை அமுல் செய்வதற்குக் கம்யூனிஸ்டுக் கட்சியினர், சர்க்காருடன் ஒத்துழைக்க வேண்டியது அவசியமே என்றும் முடிவுகள் தயாராகின்றனவாம்.

சுகர்ணோ: ரஷ்யா செல்வார்

ரஷ்யாவுக்கு வருகை தருமாறு கிடைத்துள்ள சோவியத் அழைப்பை இந்தோனேஷ்யத் தலைவர் சுகர்ணோ ஏற்றுக்கொண்டார்.

மூடப்பட்ட ஆயுர்வேதக் கல்லூரி

மீண்டும் திறக்கப்படுகிறது

திருவனந்தபுரம், ஏப். 10—

கடந்த மார்ச் திங்கள் துவக்கத்தில் மூடப்பட்ட திருவனந்தபுரம் ஆயுர்வேதக் கல்லூரி, வரும் மே திங்களில் 15-ந் தேதியன்று மீண்டும் திறக்கப்படும் என்று தெரியவருகிறது.

சுமார் 240 கல்லூரி மாணவர் கடந்த நான்கு மாதங்களாக வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர்.

தகுதி பெற்ற ஆசிரியர்களை நியமிக்கவேண்டும்—நவீன மருத்துவத் தொழில் நடத்தவும் அனுமதி வேண்டும் என்று கோரியே மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர்.

அவர்களில் சிலர், கடந்த மார்ச் திங்களில், உண்ணாவிரதம் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டதினாலேயே கல்லூரி மூடப்பட்டது.

இப்போது மாணவர்களின் பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளைக் கல்லூரிக்கு அனுப்பிவைப்பதாகக் கடிதம் எழுதியிருப்பதை முன்னிட்டே கல்லூரி மீண்டும் திறக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறதாம்.

இப்போது கல்லூரியைத் திறந்து, ஒத்தி வைக்கப்பட்ட இடைக்காலப் பரீட்சைகளை நடத்தினால் அல்லாது மாணவர்கள் ஓராண்டுக் காலப்படிப்பை இழக்க வேண்டியிருக்கும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இணைப்பு வேலைக்கு எதிர்ப்பு

மேற்கு வங்க உயர் நீதிமன்றத்தில் வழக்கு

மேற்குவங்கம்—பீகார் ஆகிய இரு மாநிலங்களையும் இணைப்பது என்ற எதேச்சாதிகார முடிவிற்கு மேற்கு வங்கத்தில் எதிர்ப்பு நாளுக்குநாள் வளர்ந்த வண்ணமுள்ளது.

மேற்கு வங்க மாநில உயர் நீதிமன்றத்தில், இந்த இணைப்பு வேலைக்கு எதிராக வழக்கு ஒன்று தொடரப்பட்டுள்ளது.

சட்டசபை உறுப்பினர் ஒருவர் உள்ளிட்ட நால்வர் இந்த வழக்கைத் தொடுத்திருக்கின்றனர்.

மேற்கு வங்க மாநில முதன் மந்திரி டாக்டர் பி. சி. ராய், சர்க்கார், மற்றும் சபைத் தலைவர் ஆகியோர் மீது இந்த வழக்கு.

மேற்கு வங்க மாநில சர்க்காருக்கு, வேறு மாநிலத்துடன் அந்த மாநிலத்தை இணைக்கவேண்டும் என்று சட்டசபையில் தீர்மானம் கொண்டுவர அதிகாரம் கிடையாது என்றும், எனவே, அவர்கள் இப்போது கொண்டுவந்திருக்கிற தீர்மானம் அரசியல் சட்டத்திற்கு விரோதமானது — செல்லத்தகாதது என்றும் அந்த நால்வர் சார்பிலும் வழக்காடப்படுகிறது.

மாநிலங்களின் அமைப்பை உருமாற்றுகிற அதிகாரம் மத்திய சர்க்காருக்கு மட்டுமே உண்டு என்ற அரசியல் சட்ட விதியும் சுட்டிக் காட்டப்படுகிறது

வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பதாயும், சீக்கிரமே வழக்கு நடைபெறும் என்றும் தெரியவருகிறது.

வழி ஏற்படும்?

முக்கியமான கைத்தொழில்களில் பணியாற்றும் தொழிலாளர்களின் சம்பளங்களை நிர்ணயிப்பதற்கு, 'ஊதிய போர்டு'கள் நியமிக்கத் திட்டக் குழு யோசனை கூறுமெனத் தான் நம்புவதாக தொழிலாளர் இலாகா அமைச்சர் மக்கள் சபையில் கூறியுள்ளார்.

இரண்டாவது திட்டக் காலத்தில், தொழிலாளர்களின் உண்மையான வருமான உயர்வுக்கான யோசனைகளைக் கூறவேண்டியது இந்தப் போர்டுகளின் வேலையாக இருக்கவேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

விடுதலை கோரும் நாகர்களை ஒடுக்க டெல்லியின் யுத்த ஏற்பாடுகள்

இராணுவத்துடன் சேர்ந்து ம. பி. போலீசாரும் வேட்டையாடுவராம்

சுதந்திர தாகம் போலீசாரையும் பற்றுகிறது?

ஷில்லாங், ஏப். 11—

நாகர்களின் தேசிய விடுதலைக் கிளர்ச்சியை ஒடுக்கிவிட டெல்லி ஆதிபத்தியவாதிகள், பிரம்மாண்டமான யுத்த ஏற்பாடுகளை மேற்கொண்டிருக்கின்றன.

நாகர்களில் தீவிரவாதிகளாயிருப்போர் புரியும் இரண்டொரு பலாத்காரச் செயல்களைக் காரணமாகக் காட்டி, டெல்லி சர்க்கார் மிகக் கொடூரமான அடக்குமுறை நடவடிக்கைகளை ஏவி விட்டு நாகர்களை வேட்டையாடி வருகின்றனர்.

இந்திய இராணுவத்தில் ஒரு மேஜர் ஜெனரலாக இருக்கும் கோசர் என்பார், இப்போது நாகர்களை ஒடுக்கத் திரட்டப்பட்டிருக்கும் இராணுவத்தின் தளபதியாக்கப்பட்டிருக்கிறாராம்.

அசாம் துப்பாக்கிப் போலீசார், அசாம் போலீசார், இந்திய இராணுவம்—இம்மூன்றிலிருந்தும் திரட்டப்பட்ட ஆயுதந்தரித்த பட்டாளத்தினர் நாகர்களை வேட்டையாடும் வேலையில் ஈடுபட்டிருக்கின்றனராம்.

இதுபோதாது என்று, மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த போலீஸ் பட்டாளத்தின் ஒரு பகுதியும் இப்போது வரவழைக்கப்பட்டிருக்கிறதாம்.

மலைப் பாங்கானதாயும், அடர்ந்த காடுகள் நிரம்பியதாயுமுள்ள பகுதிகளில் நாகர்கள் பதுங்கிக்கிடப்பதால் அவர்களைப் பிடிக்கவும், வேட்டையாடவும், அது போன்ற காடுகளில் வேலை செய்து பயிற்சியுள்ளவர்கள் தேவை என்பதற்காகவே மத்தியப் பிரதேச போலீஸ் பட்டாளம் வரவழைக்கப்படுகிறதாம். இவர்களுக்கு 'மான்சிங்' கொள்ளைக் கூட்டத்தைக் காடுகளில் சந்தித்த பயிற்சியிருக்கிறதாம்.

மேலும், இந்திய இராணுவத்தினர் வெள்ளையர் காலத்தில் பர்மா காடுகளுக்கு அனுப்பப்படு முன்பாக, மத்தியப்பிரதேசத்தைச் சேர்ந்த காடுகளில்தான் பயிற்சி பெற்றனராம்.

இத்தனை பெரிய முயற்சிகளும் தனி நாடு தேவை எனக் கிளர்ந்து எழுந்துள்ள நாகமலைகளில் வாழும் நாகர்களை அடிமை கொள்வதற்குத்தான் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

வேடிக்கை என்னவென்றால், இவ்வளவு பெரிய இராணுவம், போலீஸ், படை வரிசைகள் திரட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டாலும், நாகர்களில் தீவிரவாதிகள் தோன்றுவதைத் தடுக்க முடியவில்லை என்பதுதான்.

மேலும், சாதாரண மக்கள், போலீசார், இராணுவத்தினர் இவர்களுக்குச் சாதகமாக ஒத்துழைக்க மறுக்கின்றனராம். எத்தனைதான் பாதுகாப்புத் தருவதாகக் கூறினாலும், போலீசாரை நம்பி, நாகர்களைக் காட்டிக் கொடுக்க மறுத்து விடுகின்றனராம்.

மற்றுமோர் சிந்தனைக்குரிய விஷயம் என்னவென்றால், அசாம் போலீஸ் இலாகாவில் பணிபுரியும் பழங்குடிப் பிறந்தோரை வேறு வேறு இடத்திற்கு—நாகமலைக்கு அப்பால் மாற்றிவிட்டார்களாம்; ஏனெனில், இந்தப் பழங்குடி வீரர்கள், நாகர் கிளர்ச்சிக்கு ஆதரவு காட்டுவதுபோல நடந்து கொண்டார்களாம், சிற்சில சமயங்களில். மேலும் பலர், தம்மினத்தவர்மீது தாமே பாய்ந்து, படுகொலைகள் நடத்த மறுத்துவிட்டு, போலீஸ் வேலையைவிட்டே ஓடி விட்டார்களாம்.

நாகர்கள் விடுதலைக் கிளர்ச்சி எத்தனை வலுவானதாயிருந்தால், இப்படிப்பட்ட சம்பவங்கள் எல்லாம் நிகழ முடியும்?

சிறிய கைத்தொழில்கள் அபிவிருத்திக்கு நிதிஉதவி

மாநிலங்களுக்கு ரூ. 20 கோடி மத்திய சர்க்கார் வழங்கும்

இரண்டாவது திட்டக் காலத்தில், சிறிய கைத்தொழில்களின் அபிவிருத்திக்காக பல்வேறு மாநிலங்களுக்கும் இந்திய சர்க்கார் ரூ 20 கோடி நிதி உதவி செய்ய உத்தேசித்திருக்கின்றனராம்!

டில்லி வானொலியில், மத்திய அமைச்சர் நித்தியானந்த கனுங்கோ இதுபற்றிப் பேசுகையில், இந்த உதவியின் காரணமாக சிறிய தொழில்கள் கட்டுபடியாகக்கூடிய முறையில் முன்னேற்றமடையும் என நம்புவதாகவும், இதனால் அன்றாடத் தேவைப் பொருள்களின் உற்பத்தி பெருகுவதோடு, பலருக்கு வேலை வாய்ப்புகளும் கிடைக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

தொழிலாளருக்கு அதிக வசதிகள் கிடைக்குமா?

காலம் வந்துவிட்டதாம்!

"தொழிலாளருக்கான நஷ்டஈடுச் சட்டம், இன்ஷ்யூரன்ஸ் திட்டம், பிராவிடண்ட் நிதிகள் சட்டம் போன்ற எல்லாத் திட்டங்களையும் ஒன்றாகத் தொகுத்து, தொழிலாளருக்கு இந்நிதிகள் மூலம் அதிகப்படியான வசதிகள் கிடைக்குமாறு செய்ய வேண்டும்" என்று, மக்கள் சபையில், தொழிலாளர் நல மந்திரி குறிப்பிட்டுள்ளார்.

'இதற்கான வகையில், சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் தொகுதி மசோதாவைக் கொண்டுவருவதற்குக் காலம் வந்துவிட்டது' என்றும் அவர் கூறியுள்ளார்.

****

தலைமை நிலையம்: அறிக்கை—7/56

மாநில மாநாடு

பிரதிநிதிகள் தேர்வு

மே 17, 18, 19, 20-ந் தேதிகளில் திருச்சியில் நடைபெறவிருக்கும் தி. மு. கழக 2-வது மாநில மாநாட்டிற்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பது குறித்துக் கீழ்க்கண்ட விளக்கம் தரப்படுகிறது:—

ஒவ்வொரு கிளைக் கழகங்களிலிருந்தும், செயலாளர், மற்றுமொரு உறுப்பினர் ஆக இருவர் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

மாவட்டக் குழுக்களைப் பொறுத்தவரையில், அதன் எல்லா உறுப்பினர்களுமே பிரதிநிதிகளாகக் கலந்துகொள்ளும் உரிமை பெற்றவர்களாவர்.

பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் வரவேற்புக்குழு உறுப்பினர்களாகவும், பிரதிநிதிகளாகவும் கலந்து கொள்ளும் உரிமை பெற்றுள்ளனர்.

எனவே, இவ்விளக்கத்திற்கேற்ப எல்லாக் கிளைகளும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து, அதன் விவரத்தையும், பிரதிநிதி ஒவ்வொருவருக்கும் ஐந்து ரூபாய் விதம் கட்டணமும் கிளைக் கழகச் செயலாளர் கையொப்பமுடன், ஏப்ரல் மாதம் இறுதிக்குள், 'தோழர் அம்பில் தர்மலிங்கம், வரவேற்புக் குழுத் தலைவர், தி. மு. க. மாநில மாநாடு, 9, கிலேதார் தெரு தெப்பக்குளம், திருச்சி' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

'அறிவகம்'
சென்னை-13
11—4—56

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

****

'பம்பாய் சம்பவங்கள் குறித்து பகிரங்க விசாரணை நடத்துக'

மக்கள் சபையில் காட்கில் மீண்டும் குரல் எழுப்புகிறார்

'பம்பாய் மராட்டியருக்கு இல்லை என்ற அக்கிரமமான முடிவை டெல்லி ஏகாதிபத்தியவாதிகள் அறிவித்ததும், பம்பாயில் எழுந்த நிலைகளைக் குறித்து பகிரங்கமானதோர் விசாரணை நடைபெறுவது அவசியம்' என்று, மீண்டும் என். வி. காட்கில் டெல்லி மக்கள் சபையில் இடித்துரைத்திருக்கிறார்.

"அம்மாதிரி ஒரு விசாரணை நடைபெற்றால்தான், சந்தேகங்கள் நீங்கி நல்லெண்ணம் நிலவ முடியும்; மராட்டியர்கள்மீது சுமத்தப்படுகிற—எல்லாவற்றிற்கும இவர்கள்தான் காரணம் என்கிற வீண்பழியும் துடைக்கப்பட முடியும்"

என்று அவர், உள்நாட்டிலாகா மானியக் கோரிக்கை விவாதத்தின்போது இடித்துரைத்திருக்கிறார்.

தோட்டத் தொழிலாளர் பட்டினிப் போராட்டத்தை நிறுத்தினர்

விசாரணை நடத்த சர்க்கார் சம்மதம்

குன்னூர், ஏப் 11—

கடந்த ஒன்பது நாட்களாக நீலகிரியில் உள்ள சில தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள், அதிகமான போனஸ் தரக்கோரி மேற்கொண்டிருந்த வேலை நிறுத்த உண்ணாவிரதப் போராட்டம், நேற்று, சர்க்கார் தலையீட்டின் பேரில் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

வரும் ஏப்ரல் 14-ந் தேதியன்று சென்னைக்கு வந்து, தான் நடத்தும் விசாரணையில் கலந்து கொள்ளுமாறு தொழிலாளர் பிரதிநிதிகளையும், முதலாளிகள் பிரதிநிதிகளையும் கேட்டுக்கொண்டு சென்னை சர்க்கார் தொழிலாளர் கமிஷனர் சர்நியனுப்பியதின் பேரிலேயே தொழிலாளர்கள் போராட்டத்தைக் கைவிட்டனர் என்றும் தெரியவருகிறது.

பண்டாரநாயகா பதவி ஏற்றார்

இலங்கையின் புதிய பிரதமர்

கொழும்பு, ஏப். 12—

இலங்கையின் பிரதமமந்திரியாக 'சாலமன் வெஸ்ட் ரிட்ஜ்வே டியஸ் பண்டாரநாயகா' இன்று பகல் பதவி ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

இவரது தலைமையைப் பூண்ட மகாஜன எக்சத் பெருமுனு, கடந்த கிழமையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில், தனிப் பெரும் வெற்றி பெற்றது யாவரும் அறிந்ததே.

இலங்கையின் சரித்திரத்திலேயே, முதல் பெண் அமைச்சராக திருமதி விமலா விஜயவர்த்தன என்பவர் பதவி ஏற்கிறார்; சுகாதார இலாகா பொறுப்பு அவருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த ஒன்பது ஆண்டுக் காலமாக, சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து ஆட்சியிலிருந்து வந்த ஐக்கிய தேசியக் கட்சி, கடைசிப் பிரதமராக சர் ஜான் கொத்தலாவலையைக் கொண்டிருந்தது.

பண்டாரநாயகாவின், மகாஜன எக்சத் பெருமுனு என்ற மக்கள் ஐக்கிய முன்னணி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, விப்லவ லங்கா சமசமாஜக் கட்சி, 'சிங்கள பாஷா பெருமுனு' ஆகிய கட்சிகளைக் கொண்டதாகும்.

பண்டாரநாயகா 1951 ஜூலை வரை ஐக்கிய தேசியக் கட்சியான, முன்னைய ஆளும் கட்சியில் இருந்தவர்தான்; அந்த ஆண்டு, தேசியக் கட்சியிலிருந்து வெளியேறிய அவர், எதிர்க்கட்சிக்காரராக மாறி, 'ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி' என்ற கட்சியை நிறுவினார்.

1931 முதல் இலங்கை 'ராஜ்யக் கவுன்சில்' உறுப்பினராக இருந்து வரும் அவர், நீண்ட நாளைய அரசியல் அனுபவமும், 19 ஆண்டுக் காலம் மந்திரியாகவிருந்து பெற்ற அனுபவமும் கொண்டவராவார்.

ஆக்ஸ்போர்டில் கல்வி பயின்ற அவர், அரசியலுக்கு வருமுன் வழக்கறிஞராகத் தொழில் நடத்தியவர்.

நுண்ணறிவும் திறனும்கொண்ட அரசியல் வாதி என்றும் புகழப்படுபவர் பண்டாரநாயகா.

பிரதம மந்திரியாக மட்டுமின்றி, அவரே வெளிவிவகார, தற்காப்பு இலாகாக்களின் மந்திரியாகவும் இருப்பார்.

13 பேர் கொண்ட மந்திரி சபை பதவி ஏற்றவுடன், வானொலிமூலம் பிரதம மந்திரி பண்டாரநாயகா மக்களுக்கு விடுத்த செய்தியில், அடிப்படை முறையில் சிறுபான்மையினருக்கும், 'அரசியல் எதிரி'களுக்கும் நேர்மையான நியாயம் வழங்கப்படுமென்று உறுதி கூறினார். பொறுப்புணர்ச்சியுடனும், தன்னடக்கத்துடனும் தங்கள் கடமையை மேற்கொள்ளுவதாகவும், மக்களின் விருப்பத்தை மதித்து கடமைகளை நிறைவேற்றுவதாகவும் குறிப்பிட்டுக் கூறினார்.

மதுவிலக்கு அமுலாகும் இலட்சணம்!

சேலம், ஏப். 10—

1956 மார்ச் மாதம் 31-ந் தேதியோடு முடிவடைந்த மூன்று மாதத்தில், 7,087 மதுவிலக்குக் குற்றங்கள் சேலத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம்.

ஒரே மாதத்தில் 2,159 குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டதென்றும் இவற்றில் 2,112 பேர் சம்மந்தப்பட்டுள்ளனரென்றும், மதுவிலக்குக் குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் சேலம் மாவட்டம் ஒரு புதிய சாதனையைச் சாதித்துள்ளதென்றும் கூறப்பட்டுள்ளது.

பங்கு மாற்ற பத்திரங்கள் கட்டணம்

நாடு முழுமையிலும் ஒரேமாதிரி அமுலாகும்

பங்குகளைக் கைமாற்றுவதற்கான பத்திரங்களுக்கான கட்டணத்தை, இந்தியாவெங்கும் ஒரே மாதிரியாக்குவது—ஒரே விகிதமாக்குவது என்று டெல்லி சர்க்கார் முடிவு செய்து, அதற்கான விகிதங்களையும் நிர்ணயித்திருப்பதாகத் தெரியவருகிறது.

100 ரூபாய் பெறுமான பங்குகளைக் கைமாற்றுவதற்கான பத்திரங்களுக்கு 12 அணா தர வேண்டுமென நிர்ணயிக்கப்பட்டிருப்பதாயும், இந்த விகிதம் ஏப்ரல் முதல் தேதிமுதல் அமுலாகும் என்றும் தெரியவருகிறது.

இந்தப் புதிய ஏற்பாடு, பம்பாயில் ரூ. 1-2-0; சென்னையில் ரூ. 1-8-0; கான்பூரில் ரூ. 0-15-0; கல்கத்தாவில் ரூ. 0-12-0; திருச்சியில் ரூ. 0-8-0—என்று இருந்த வேறுபாடான கட்டண விகிதங்களை மாற்றியமைக்கிறது.

பல்வேறு மாநிலங்களில் அகதிகள் குடியேறுவர்?

அமுல் நடத்தும் வகைபற்றி திட்டக் குழு ஆலோசனை?

பெங்களூர், ஏப். 12—

கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வெளியேறி வந்துள்ள அகதிகளைப் பல்வேறு மாநிலங்களில் குடியமைக்கும் திட்டத்தை விரைவில் அமுல் நடத்தும் வழிகள் பற்றி திட்டக் குழு ஆலோசித்து வருகிறதாம்.

அகதிகளின் குடியமைப்புக்காக ஷிமோகா மாவட்டத்தில், 4,000 அல்லது 5,000 ஏக்கர் நிலம் ஒதுக்குவதென்று மைசூர் சர்க்கார் தீர்மானித்துள்ளதாம்.

'நெய்வேலி திட்டத்தை விரைவாகச் செயல்படுத்துக'

'சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை துவக்குக'

மக்கள் சபையில் மீண்டும் தென்னாட்டுக் குரல் ஒலிக்கிறது

"நெய்வேலி நிலக்கரியைத் தோண்டியெடுக்கும் திட்டத்தை யுத்த கால அவசரத் திட்டம் போன்று கவனிக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

"பழுப்பு நிலக்கரிக்கு அடியில் உள்ள நீரை இறைப்பதற்கு, அங்கு இப்போது 16 'பம்பு'கள் மட்டுமே வேலைசெய்கின்றன; இன்னும் பம்புகள் அதிகமாகப்படுமானால் வேலை துரிதமாக நடைபெற முடியும் என்று கருதுகிறேன். சர்க்கார் ஏன் இதைச் செய்யக் கூடாது?"

என்று தோழர் எஸ். வி. ராமசாமி அவர்கள், டெல்லி மக்கள் சபையில் மீண்டும் தென்னாட்டின் குரலை ஒலித்திருக்கிறார்.

மேலும் அவர், 'உடனடியாகச் சேலத்தில் இரும்பு உற்பத்தித் தொழிற்சாலை ஒன்று நிறுவவேண்டும்' என்றும் வற்புறுத்தியிருக்கிறார்.

"ஜப்பான் நாட்டின் நூற்றுக் கணக்கான சிறு தொழில்களில் சிலவற்றையேனும் ஆராய்ந்து அறிந்து, அவற்றை இந்த நாட்டில் துவக்குவதற்கு வழிவகை செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்,"

என்று அவர் யோசனை கூறியிருக்கிறார்.

ஆழந் தெரியாமல் காலை விடுகிறாரா காமராசர்?

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

'தேர்தலைப்பற்றி, தி. மு. கழக மாநாடு முடிவு செய்யவிருக்கிறது' என்று எத்தனையோ மாதங்களாக அறிவித்து வருகிறதே கழகம். அந்த அறிவிப்பைக் கண்டே, இந்த வீரர் அலறுவானேன்?

தேர்தல், தேர்தல் என்று சுரம் கண்டவன் பிதற்றுவது போல, எதற்கெடுத்தாலும், 'தேர்தலில் நிற்கட்டுமே' என்று நம்மைப் பார்த்து மமதையோடு பேசும் இவருக்கு, இலங்கையில் நடைபெற்று முடிவுற்றுள்ள தேர்தலைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

'தேவிகுளம் - பீர்மேடு போய்விட்டால் என்ன?' என்று கேட்கிறார், இந்தத் துறவி! — மண்ணாசை வெறுத்துவிட்ட மகான்! இவருக்குத்தான், தமிழ் நாடு—தமிழர் என்ற பற்றும் பாசமும் கிடையாதென்றால், எல்லோருமே இவரைப்போலவே 'பண்டாரங்க'ளாக இருந்துவிட முடியுமா? இவருக்குத் தாய் நாட்டைப் பற்றிக் கவலை இல்லை என்றால், எல்லோரும் அப்படியே கவலையற்றிருக்க வேண்டுமென்கிறாரா?

தனது வடநாட்டு எசமானர்களின் கட்டியக்காரராகக் குற்றவேல் புரியும் முழு அடிமை மனிதராக இருக்க இவர் ஒப்பியிருப்பதுபோல, எல்லோரும் ஒப்பவேண்டும் என்கிறாரா?

என்னமோ தெரியவில்லை—ஊமையாயிருந்த அவர், உளறுவாயராக மாறி, கழகத்தை ஏசிப்பேச முற்பட்டிருப்பதைக் கண்டு, நாட்டு மக்கள், 'ஆழந்தெரியாமல் காமராசர் காலை விடுகிறார்' என்று கூறுகின்றனர்!

கழகத் தோழர்களுக்கு:

★

உறுப்பினராகச் சேர்ந்துள்ளவர்களுக்குரிய உரிமைச் சீட்டு, மே திங்கள் 1-வது வாரத்திலிருந்து அனுப்பி வைக்கப்படும்.

—தலைமை நிலையம்
தி. மு. கழகம்.

கழகக் கூட்டம்

★

மூனார் (சோத்துப்பாறை)

14, 15–4–56 தேதிகளில் நடைபெறும் பொதுக்கூட்டங்களில் தோழர்கள் சே. ஏ. கலையழகன், புலவர் பண்ணன், உ பி கிருஷ்ணசாமி ஆகியோர் பேசுவர்.

புதுவை — இலாசுப்பேட்டை தி. மு. க. ஆண்டு விழா

15—4—56 மாலை 6 மணிக்கு, இலாசுப்பேட்டைத் தி. மு. கழக 2-ம் ஆண்டுத் தொடக்க விழா. தோழர் ச. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெறும். உள்ளூர்-வெளியூர்த் தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றுவர்.

வி.வி.டி. நினைவு ஆரம்பப் பள்ளித் திறப்பு விழா

15—4—56 மாலை 6 மணியளவில், தூத்துக்குடி — ஆரோக்கியபுரம், எஸ். எம். எஸ். மாளிகையில், மாவட்ட கல்வி இலாகா தலைவர் தலைமையில், தோழர் மு. கருணாநிதி அவர்கள் மேற்படி பள்ளியைத் திறந்துவைப்பார்.

தோழர்கள் சாம்—மாசிலாமணி, சங்கரநாராயணன், பூராசா, எம். எஸ். சிவசாமி கலந்துகொள்வர்.

சொற்பயிற்சிக் கூட்டம்

14—4—56 மாலை 6-30 மணியளவில், சென்னை - பிராட்வே, எண். 4/83-ஏ. 11-வது வட்ட தி. மு. கழகப் பணி மனையில், தோழர் எஸ். எஸ். துரைசாமி தலைமையில் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும் 'அச்சம்' என்ற தலைப்பில், தோழர்கள் பலர் பேசுவர்.

திருவள்ளுவர் முன்னணிக் கழகம்

14—4—56 மாலை 6 மணிக்கு, சென்னை கொருக்கையம்பதி, எண். 15, நாகப்பநாயக்கன் தெரு, கழகப் பணி மனையில் தோழர் சேதுராசன் தலைமையில் 'அரசியலும் - சமுதாயமும்' என்னும் பொருள் பற்றி கழகத் தோழர்களும், மற்றும் பலரும் பேசுவர்.

தூளை நகர இளைஞர் கழகம்

14-4-56 மாலை 6-30 மணிக்கு, எண் 10, மாணிக்கச்செட்டித்தெரு கழக மனையில் தோழர் சி. எம். பரிபூரணம் 'தபால்—தந்தி இலாகாவின் தொழிற் சங்கம்' என்னும் பொருள் பற்றி பேசுவார்.

சேலம் 19-வது வட்ட தி. மு. கழகசெயற்குழு தோழர்கட்கு

16—4—56 இரவு 9 மணிக்கு கழகக் கட்டிடத்தில், தோழர் கே. ஏ. இராமய்யா தலைமையில் செயற்குழு கூட்டம் நடைபெறும். அதுபோது மாநில மாநாட்டுக்குப் பிரதிநிதி தேர்ந்தெடுத்தல்; மற்றும் பல முக்கிய விஷயங்கள் பற்றி ஆலோசிக்கப்படும்.

சுகாதாரப் பிரச்சாரம்

15—4—56 காலை 7-30 மணியளவில், சென்னை-வண்ணையம்பதி இளங்கோ கலை மன்றச் சார்பில், இளங்கோ படிப்பக மாணவ-மாணவிகளும், மன்ற உறுப்பினர்களும் தோழர் வி. சுந்தரமூர்த்தி தலைமையில் சென்று சுகாதாரப் பிரச்சாரம் செய்வார்கள்.

திருமணம்

15—4—56 காலை 9 மணிக்குப் புதுவை — பூரணங்குப்பத்தில், தோழர் கோ. சுந்தரராசு—தோழியர் க. குப்பம்மாள் திருமணம் தோழர் ச. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெறும்.

★★★-★★★★-★★★★★★★★★★★

சிலம்பு நாடக மன்றம்
அளிக்கும் சிந்தனை நாடகம்

அண்ணாதுரை
தலைமையில்

பன்மொழிப்புலவர்
கா. அப்பாதுரையின்
அழகோவியம்

'காற்றும் மழையும்'

வசனம்: இரா. மணிவேந்தன்
பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்
22-4-56 ஞாயிறு மாலை 6-30க்கு
சென்னை ஒற்றவாடைதியேட்டரில்

கவிஞர் கண்ணதாசன், வளையாபதி-முத்துகிருட்டினன், கே. எம். கண்ணபிரான், எஸ்.எஸ்.பி. லிங்கம், வனிதா, காந்தா, மல்லிகா ஆகியோர் நடிக்கின்றனர்

கட்டணம்: ரூ. 3, 2, 1, 0-8-0

டிக்கட்டுகள் கிடைக்குமிடம்:
13, அருணாசல ஆச்சாரி தெரு,
சேப்பாக்கம்.

என். கிருஷ்ணன்-செயலாளர்

★★★★★★★★★★-★★★★-★★★

ஏஜெண்டுகள் தேவை

கீழ்க்கண்ட இடங்களில் 'நம் நாடு' இதழ்களை விற்பனை செய்ய முன்பணம் கட்டக் கூடிய பொறுப்புமிக்க ஏஜெண்டுகள் தேவை:—

- திருச்சி
- திருநெல்வேலி
- காஞ்சீபுரம்
- யாழ்ப்பாணம்
- இராசபாளையம்
- திசையன்விளை

'பாரதமாதா' மட்டும் போதுமாம்!

"'கர்நாடக மாதா வாழ்க' என்ற கோஷங்களையும் நான் கேட்டேன்—'பாரத் மாதா வாழ்க' என்ற குரலோடு!

இது என்ன புது 'மாதா'வாக இருக்கிறது?

'ஒரு மாதா — 'பாரத மாதா' போதாதா?

உங்களுக்குப் பல 'மாதா'க்கள் இருந்தால் குழப்பமும், கசப்பும் தானே ஏற்படும், வீட்டில்?

பல 'மாதாக்'கள் என்றால், பல குடும்பங்கள் தேவைப்படும்; பின் ஒவ்வொருவரும் தனித் தனியாகச் சுதந்திரமாக வாழ எண்ணுவர்;

னி மாநிலமும், தனி சலுகைகளும் வேண்டும் என்ற கோரிக்கைகளினால் நிரம்ப தொல்லைகளை நாம் அனுபவித்துவிட்டோம். எனவே, நாம் எல்லோரும் ஒரே 'மாதா'வைக் கொண்டு திருப்திப்படுவோம்,"

என்று, யார்தான் கூறியிருப்பார்கள்? உங்களுக்குத் தெரியாதா என்ன? இந்தியப் பிரதமர் நேரு பெருமானைத் தவிர, வேறு யார்தான் இந்த உபதேசத்தில் ஈடுபடுவார்கள்?

சிர்சி என்ற கர்நாடக நகரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையிலேயே, அவர் இம்மாதிரி கூறினாராம்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாய்ப்பட்டிருப்பட்டிருப்பதால் நான்கு மாதங்கள் 'ரஜா' வேண்டுமெனக் கோரி மனுச் செய்தார். 'ரஜா' கிடைக்குமுன் 1953-ல் அவர் இயற்கையெய்திவிட்டார். ஆனால் சர்க்கார், அவருக்கு 1956 ஏப்ரல் 7-ந் தேதியன்று, நான்கு மாதங்கள் 'ரஜா' தருவதாக உத்தரவு அனுப்பினராம்; எப்படி!

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 ஞானியகாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.